பாடம் - 5 | الدرس الخامس

## பகிரங்க பிரச்சாரம்
## الدعوة الجهرية

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தனித்தனி நபர்களை அழைப்பதில் மூன்று ஆண்டுகளைக் கழித்த பின்னர் 'உமக்கு கட்டளையிடப்பட்டிருப்பதை பகிரங்மாக அறிவிப்பீராக!இணைவைப்பவர்களைப் புறக்கணிப்பீராக!'(15:94) எனும் வசனம் இறங்கியது. உடனே ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபா குன்றின் மீது நின்றுகொண்டு மக்காவாசிகளை அழைத்தார்கள். அவர்கள் முன் அதிகமானோர் ஒன்று கூடினார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பெரிய தகப்பனார் அபூலஹபும் அங்கு இருந்தான். அவன்தான் குறைஷிகளிலேயே அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கடுமையான விரோதி.

மக்கள் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களிடம் ஒன்று திரண்டதும், 'இம்மலைக்குப் பின்னால் எதிரிகள் உங்களை அழிக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என நான் உங்களிடம் கூறினால் என்னை நீங்கள் நம்புவீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கவர்கள், 'ஆம்! உண்மையையும் நம்பிக்கையையும் தவிர வேறு எதையுமே நாங்கள் உங்களிடம் அறிந்ததில்லை' எனக்கூறினார்கள். அப்போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், 'நிச்சயமாக நான் கடுமையான வேதனை குறித்து உங்களை எச்சரிக்கிறேன்' எனக் கூறினார்கள். பின்பு அவர்களை அல்லாஹ்வின் பக்கமும் சிலைவணக்கங்களை விட்டுவிடுமாறும் அழைக்க ஆரம்பித்தார்கள். அப்போது அக்கூட்டத்திலிருந்த அபூலஹப் கொதித்தெழுந்தான். 'உனக்கு நாசம் உண்டாகட்டும்! இதற்காகவா எங்களை ஒன்று கூட்டினாய்?' எனக் கேட்டான். இதன் பிறகு அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கி வைத்தான்: 'அபூலஹபின் இரு கைகளும் அழிந்தன! அவனும் அழிந்தான்! அவனது செல்வமும் அவன் செய்தவையும் அவனைக் காக்கவில்லை. கொழுந்துவிட் டெரியும் நெருப்பில் அவனும் விறகு சுமப்பவளான அவனது மனைவியும் கருகுவார்கள். அவள் கழுத்தில் முறுக்கேறிய ஈச்சமரக் கயிறு உள்ளது.' (111:15)

நபிகள் நாயகம்(ஸல்)தொடர்ந்து அழைப்புப் பணியை மேற்கொண்டார்கள். மக்கள் கூடுமிடங்களிலெல்லாம் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்து அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்துக் கொண்டிருந்தார்கள். கஅபத்துல்லாஹ்வில் தொழுது வந்தார்கள். மக்கள் கூடும் இடங்களுக்கும் இணைவைப்போரின் வியாபாரத் தலங்களுக்கும் சென்று அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். இதனால் அவர்கள் அதிகமான துன்பங்களுக்கு ஆளாக நேர்ந்தது. இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோருக்கும் இறைநிராகரிப்பாளர்கள் கொடுத்து வந்த தொல்லைகள் அதிகமாயின. யாஸிர்(ரலி), சுமையா(ரலி) மற்றும் அவர்களின் மகன் அம்மார்(ரலி) ஆகியோருக்கு ஏற்பட்ட சோதனைகள் இதற்கு உதாரணமாகும். ஆம்! அம்மார் (ரலி) யின் தாய் தந்தையர் இருவரும் வேதனையின் கொடுமையால் உயிர்த்தியாகிகளாக உயிரிழந்தார்கள். இஸ்லாத்தில் முதன் முதலாக உயிர்த்தியாகம் செய்த பெண்மணி சுமையா (ரலி) அவர்கள் தான்.

அதுபோல பிலால்(ரலி) அவர்களுக்கும் அபூஜஹ்ல், உமையா பின் கலஃப் ஆகிய இருவரால் துன்பம் ஏற்பட்டது. காரணம் பிலால்(ரலி) அபூபக்கர்(ரலி) அவர்கள் மூலமாக இஸ்லாத்தை ஏற்றிருந்தார்கள். அவர்களின் எஜமான் உமையா பின் கலஃப், இதை அறிந்ததும் பிலால் இஸ்லாத்தை விட்டுவிட வேண்டுமென்பதற்காக எல்லா வகையான வேதனைகளையும் பிரயோகித்துப் பார்த்தான். ஆயினும் பிலால் மறுத்து விட்டார்கள். தமது மார்க்கத்தையே உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள்.

பிலால் அவர்களை உமையா சங்கிலியால் கட்டி மக்காவிற்கு வெளியே கொண்டு வந்தான். அனல் பறக்கும் சுடுமணலில் படுக்கவைத்து அவர்களின் நெஞ்சில் மிகப்பெரும் பாறாங்கல்லை வைத்து அவனும் அவனைச் சாந்தவர்களும் சாட்டையால் மாறி மாறி பிலாலை அடித்தனர். பிலால்(ரலி) அவர்கள் அஹத்! அஹத் (ஏகன்! ஏகன்!) என்றே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்கள். இந்நிலையில் பிலாலை அபூபக்கர்(ரலி) அவர்கள் கடந்து செல்லும் போது உமையாவிடமிருந்து அவர்களை விலைக்கு வாங்கி அடிமைத் தளையி லிருந்து அவர்களை அல்லாஹ்வின் பாதையில் விடுவிடுத்தார்கள்.

இத்தகைய கொடுமைகள் நிகழ்ந்தபோது தான் முஸ்லிம்கள், தாங்கள் இஸ்லாத்தைத் தழுவியதைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்தது அறிவார்ந்த செயலாக ஆனது! இது போலத்தான் நபிகள் நாயகம் (ஸல்) முஸ்லிம்களைச் சந்தித்து உரையாடுவதும் இரகசிய மாகவே இருந்தது! ஏனெனில் அவர்களைச் சந்திப்பது, உரையாடுவது பகிரங்கமாக நடந்திருந்தால் நபியவர்களை- முஸ்லிம்களுக்கு நற்போதனை அளிக்கவிடாமலும் நல்வழிகாட்டவிடாமலும் இணைவைப்பாளர்கள் நிச்சயம் தடுத்திருப்பார்கள்! ஒருக்கால் அந்தச் சூழ்நிலை இரு சாராருக்கும் மோதலை உருவாக்கும் அளவுக்குச் சென்றிடலாம். அப்படி ஒரு மோதல் உருவானால் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்கே அதுவழிவகுத்திடலாம். ஏனெனில் அந்த அளவு முஸ்லிம்களின் எண்ணிக்கை அப்போது குறைவாக இருந்தது. அவர்கள் நிராயுதபாணிகளாகவும் இருந்தனர். எனவே தான் மறைவாகச் செயல்படுவது விவேகமாக இருந்தது. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களைப் பொறுத்தவரை குறைஷி நிராகரிப்பாளர்களின் தொல்லைகள் தமக்கு இருந்தபோதிலும் தம் பிரச்சாரத்தையும் வணக்க வழிபாட்டையும் இணை வைப்பவர்களுக்கு மத்தியில் பகிரங்கமாகவே செய்துவந்தார்கள்.